
திருவாசகம் - 20

# திருப்பள்ளியெழுச்சி கதைவழிவில்

கே. வி. குணசேகரம்



வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



உ

சிவமயம்

# திருப்பள்ளியெழுச்சி கதை வடிவில்
# திரோதான சுத்தி
# திருப்பெருந்துறையில் அருளியது

சிவனது பஞ்சகிருத்தியங்களுள் திரேதானம் என்பது ஒன்று. அது மறைத்தல் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. சொரூப ஞானத்தைத் தாமோ குணம் மறைத்துக் கொண்டிருக்கிறது. அதிகாலையில் எழுந்து திருப்பள்ளியெழுச்சி பாடிச் சிவனைத் துயிலெழுப்பி வணங்குபவர்களுக்குத் தாமோ குணம் நீங்கும். இதனைத் திரோதான சுத்தி எனப்படும்.

**போற்றியென் வாழ்முத லாகிய பொருளே**
**புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்**
**டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்**
**எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்**
**சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்**
**திருப்பெருந் துறை உறை சிவபெருமானே**
**ஏற்றுயர் கொடியுடை யாய்எனை யுடையாய்**
**எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. 01**

அதிகாலையில் எழுந்த மகாலிங்கமும் நல்லைநாதனும் ஆச்சிரமத்தில் உள்ள சிவன்கோவிலுக்கு வந்தனர். அவர்கள் வந்தபோது கதிரேசன் கோயிலின் முன்பகுதியைக் கூட்டித் துப்பரவு செய்து கொண்டிருந்தார். அவர்களைக் கண்டதும் கதிரேசன் சொன்னார்; "ஏனோ தெரியவில்லை. இன்று அதிகாலை இரண்டு மணிக்குக் கண்விழித்துவிட்டேன். அதன்பின் நித்திரை வருவதாக இல்லை. அதனால் சிவனைத் திருப்பள்ளியெழுச்சி பாடி எழுப்பி வணங்கலாம் என்று நினைத்து வந்தேன்" என்றார்.

திருப்பள்ளியெழுச்சி பாடிச் சிவனை எழுப்பி வணங்கிய பின்பு எதைக் கேட்டாலும் சிவன் மனமகிழ்வுடன் தருவார் என்று தமிழ்நாட்டிற்குச் சென்றபோது அங்கே

இருந்த மாடன் சுவாமியார் சொன்னவர். தனக்குத் தெரிந்த சிவனடியாரின் பெண்ணை அவனது காதலன் ஏமாற்றியதால் அவளுக்குப் பித்துப் பிடித்துவிட்டதாம். அதைக் குணப்படுத்த முடியவில்லையாம். அப்போது மாடன் சுவாமியார் அப்பெண்ணின் தந்தையை அழைத்துச் சிவனை அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி பாடித் துயிலெழுப்பி உனது பெண்ணின் பிரச்சினையைக்கூறு என்றவராம். அதன்படி அச்சிவனடியார் சிலகாலம் செய்துவர அப்பெண்ணின் பித்து மாறிவிட்டதாம். அதன்பின் அவள் திருமணம் செய்து மகிழ்வுடன் வாழ்கிறாள்" என்று சொன்னவர். இங்குள்ள அடியார்க்கு நான் இதைச் சொல்ல வேண்டும்" என்றான் மகாலிங்கம்.

"கதிரேசனின் மனதில் கவிதாவின் நினைவு வந்தது. அவளும் இவ்வாறுதான் ஏமாற்றப்பட்டவள். அவளுக்கு இதைச் சொல்ல வேண்டும்" என்று நினைத்தவாறு முகம், கை கால்களைக் கழுவிவிட்டு சிவனுக்கு முன்னால் வந்தமர்ந்தார். கதிரேசன்; "சிவனே, அறியாப் பருவத்தினளான கவிதாவை ஒருவன் ஏமாற்றிவிட்டான். அவளுக்காக நான் திருப்பள்ளியெழுச்சி பாடுகிறேன். அவளுக்கு நல்வாழ்வு கொடு. என் உயிரின் உயிரான சிவனே, உனக்கு நான் எனது காலை வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். பொழுது விடிகிறது. உனது பாதக்கமலங்களுக்குத் தேவையானளவு மலர்கள் சமர்ப்பிக்கின்றேன். அருளுக்கு அடையாளமாக நான் பூக்களைத் தூவும்போதும், மாலை கட்டி அணிவிக்கும்போதும் நீ, மகிழ்வடைவது எனக்குத் தெரிகிறது. உலகில் உள்ள அனைவரும் இன்பமாக வாழவேண்டும். கவிதா யார் என்றே எனக்குத் தெரியாது. உனது அருளால் அவளது தந்தை அவளை அழைத்து வந்து எனது பொறுப்பில் விட்டுச் சென்றுள்ளார். அவளுக்கு நல்வாழ்வு கொடு" என்று மனமுருகினார் கதிரேசன்.

**அருணன் இந்திரன் திசை அணுகினன் இருள்போய்**
**அகன்றது உதயநின் மலர்த்திரு முகத்தின்**
**கருணையின் சூரியன் எழவெழ நயனக்**
**கடிமலர் மலரமற்று அண்ணலங் கண்ணாம்**
**திரள்நிரை அருள்பதம் முரல்வன இவையோர்**
**திருப்பெருந் துறை உறை சிவபெருமானே**
**அருள் நிதி தர வரும் ஆனந்த மலையே**
**அலைகடலே பள்ளி யெழுந்தருளாயே. 02**

“சிவனே, சூரியன் கிழக்கே வர இருள் நீங்கும் சூரியோதயம்போல உனது முகத்தில் எப்போதும் கருணை பொழிகிறது. மலர்கள் விரிவதைப் போல மெல்லக் கண்விழி. வண்டுகள் ரீங்காரமிட்டு உன்னைத் துயில் எழுப்புவதுபோல நாம் உன்னைத் துயிலெழுப்புகிறோம். இறைவா, அருளைத் தருவதில் நீ ஆனந்த மலையைப் போன்றவன். காலையில் விழித்தெழுந்து அனைவருக்கும் அருளை வழங்கு” என்று இரந்தார் கதிரேசன்.

“நல்லை, சிவனது அருள்மலையைவிட உயரமானது, அதை அடியார்க்கு அப்படியே அள்ளி வழங்கி ஆனந்தப்படுபவன் சிவன். மாடன் சுவாமியார் சொன்னார்; “ஓர் ஏழை விவசாயிக்கு ஒரு மகள் இருந்தாள். அவளுக்குப் படிப்பே வராது. அதனால் ஆசிரியர்கள் அவளைக் கேலி செய்யும்போது, “நீ பாடசாலைக்கு வந்து கழிக்கும் நேரத்தில் உனது தந்தையின் மாடுகளை மேய்த்தால், அது உனது தந்தைக்கு உதவியாக இருக்கும்” என்பார்களாம். அவள் அழுதவாறு பாடசாலைக்குச் செல்வதை நிறுத்தி விட்டாள். அந்த ஏழை விவசாயி என்னிடம் வந்து அழுது புலம்பினான். அவனுக்கு நான் சொன்னேன்; “மகனே, நீயும் உனது மகளும் அதிகாலையில் எழுந்து பூக்களைக் கொய்து, அதைச் சிவனின் பாதங்களில் இட்டுத் திருப்பள்ளியெழுச்சி பாடிச் சிவனைத் துயிலெழுப்பி அவனிடம் உங்கள் குறையை முறையிடுங்கள்” என்றேன். அவர்கள் அவ்வாறு செய்தனர். இப்போ அந்த ஏழையின் மகள் வைத்தியராகியுள்ளாள்” என்றவர். உனது நண்பனின் மகன் பாடசாலைக்குச் செல்லாது நண்பர்களுடன் ஊர்சுற்றுவதாகச் சொன்னாய். அவனது தந்தையைத் திருப்பள்ளியெழுச்சி பாடச் சொல்” என்றான் மகாலிங்கம்.

“பாவம் அவன் ஒரே ஒரு பிள்ளை. செல்லம் கொடுத்து வளர்த்ததால் அப்படியாகி விட்டான். கட்டாயம் சொல்கிறேன்” என்றார் நல்லைநாதன்.

**கூவின பூங்குயில் கூவின கோழி**

**குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்**

**ஓவின தாரகை ஒளியொளி உதயத்து**

**ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்**

**தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்**

**திருப்பெருந் துறை உறை சிவபெருமானே**

**யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்**

**எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. 03**

மறுநாள் அதிகாலை கவிதாவையும் அழைத்துக் கொண்டு கதிரேசன் ஆச்சிரமத்தில் உள்ள சிவன் கோவிலுக்கு வந்தார். அங்கு நல்லைநாதனும் மகாலிங்கமும் வேறு சிலரும் நின்றனர்.

“கவிதா, அதிகாலையில் எழுந்து, நீராடி விட்டு மனத்தூய்மையுடன் மலர்களைப் பறித்துச் சிவனது திருவடியில் சமர்ப்பித்துவிட்டுத் திருப்பள்ளியெழுச்சி பாடிச் சிவனைத் துயிலெழுப்பி வணங்கியபின் அவரைக் கேட்கும் பலன்கள் கிடைக்கும். அதை உனக்குச் சொல்ல மறந்து விட்டேன். நேற்றுக்காலை மகாலிங்கம் தான் அதை எனக்கு நினைவுபடுத்தினான். அதனால் தான் காலையில் உன்னை இங்கு அழைத்து வந்தேன். பறவைகள் சிவனைத் துயிலெழுப்புவற்காக கலகலக்கின்றன. குயில்கள் இனிமையாகக் கூவுகின்றன. வானத்தில் ஒலித்த நட்சத்திரங்களின் ஒளி ஒடுங்குகிறது. உதயத்து ஒளி மேலோங்குகிறது. அப்படியான வேளையில் வாழ்க்கைக்கு ஒளியூட்டும் முதல்வனான சிவனின் திருவடிகளைப் பார்த்து வணங்குதல் வேண்டும். அவன் தன்னை வணங்காதவர்களுக்கு அருளமாட்டான். பக்தர்களுக்குத் தன்னை மகிழ்வுடன் வெளிப்படுத்துவான். அதனால் பூக்களை அவனது திருவடியில் சமர்ப்பித்துத் திருப்பள்ளியெழுச்சியை இசையுடன் பாடு” என்றார்.

“எனக்குச் சிவனாக நீங்கள் இருக்கிறீர்கள். எல்லாம் எதிர்பாராமல் கிடைக்கிறது. பிறகு ஏன் நாம் சிவனைத் தொந்தரவு செய்வான்” சிரித்தாள் கவிதா.

“அப்படியல்ல அம்மா, இன்னும் உனக்கு எவ்வளவோ நடைபெற வேண்டும்” என்று கதிரேசன் கூறும்போது கவிதா சொன்னாள்; “நன்றையும் தீயதையும் சமயமறிந்து தடுப்பவன் சிவன். இனி அவனை வாழ்நாள் முழுவதும் வணங்கிச் சிவசேவை செய்து அவனை அடைய வேண்டியது தான். வேறு எதுவும் தேவையில்லை. நான் உங்கள் விருப்பப்படி வணங்குகின்றேன். ஆனால் முன்பு சொன்னதுபோல எதுவும் கேட்க மாட்டேன்” என்று கூறிவிட்டுத் தான் கொண்டு வந்தமாலையைச் சிவலிங்கத்துக்குச் சூட்டிவிட்டு, மலர்களைச் சிவனின் பாதங்களில் சமர்ப்பித்துவிட்டுத் திருப்பள்ளியெழுச்சியை இனிமையாகப் பாடத் தொடங்கினாள் கவிதா.

“சிவனே, நான் உன்னை எதுவும் கேட்பதில்லை. இப்போது கேட்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறேன். தயவுசெய்து கவிதாவைப் புரிந்து கொள்ளும் ஒரு சிவனடியானை அவளுக்கு மாப்பிள்ளையாகக் கொடு” என்றபோது அவரது கண்கள் கலங்கின.

**இன்னிசை வீணையார் யாழினர் ஒருபால்**

**இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்**

**துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்**

**தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்**

**சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்**

**திருப்பெருந் துறை உறை சிவபெருமானே**

**என்னையும் ஆண்டுகொண்டின்னருள் புரியும்**

**எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. 04**

அப்போது நல்லைநாதன் தனது நண்பனான சக்திவேலுடனும் அவனது மகன் காந்தரூபனுடனும் கதிரேசனுக்கு அருகில் வந்து சொன்னான்; இவர் தான் எனது நண்பர் சக்திவேல். இவர் அவரது மகன் காந்தரூபன்" என்றான் நல்லைநாதன்.

கதிரேசன் காந்தரூபனை நிமிர்ந்து பார்த்தார். பதினாறு பதினேழு வயது மதிக்கத்தக்க சிறுவன் அவன். இந்த வயதில் போதைப் பொருட்களை உண்ணப் பழகிவிட்டான். அவனது முகம் காய்ந்து கறுத்து இருந்தது.

"ஐயா, நான் தொழில் காரணமாகக் கொழும்பில் வசிக்கிறேன். இங்கு எனது மனைவியும் பிள்ளைகளும் வாழ்கின்றனர். நானில்லாததால் இப்படி ஏற்பட்டுவிட்டது" கலங்கினான் சக்திவேல்.

"மகனே, திருந்தி நல்வாழ்வு வாழவேண்டும் என்று நீ விரும்பினால் ஆச்சிரமத்திற்கு வா. சந்தர்ப்ப சூழ்நிலைகளால் நீ சேரக்கூடாதவர்களுடன் சேர்ந்து நாசமாகி விட்டாய். தற்போதைய இளைஞர்கள் பலர் கெட்டழிவற்குக் காரணம் கடவுள் பக்தி இல்லாமையேயாகும். கடவுளை வணங்குபவர்கள் தீய செயல்களைச் செய்யும்போது அதனால் பாவம் வந்து சேர்ந்துவிடும் என்று பயப்படுவார்கள். கடவுள் நம்பிக்கை இல்லாதவனுக்கு அந்தப் பயம் இல்லை. நீ தினமும் அதிகாலையில் ஆச்சிரமத்திற்கு வந்து அடியார்கள் சிவனைத் துயிலெழுப்பி மலர்களைத் தூவித் திருப்பள்ளியெழுச்சி பாடுவார்கள். நீ அவர்களுடன் சேர்ந்து பாடு. உள்ளம் சிவனிடம் லயித்தால் அதில் தீய எண்ணங்கள் உண்டாகாது. காலையில் உள்ளம் வெறுமையாக இருக்கும். சிவன் மகிழ்வுடன் இருப்பார். அதனால் மனமுருகி வேண்டினால் கேட்டது

கிடைக்கும். போ, போய் நல்லைநாதனுக்கு அருகில் இருந்துபாடு. வீணை, யாழ் முதலிய இசைக்கருவிகளோடு பலர் இருக்கு வேதத்தை ஓதுகின்றனர். கைகளால் சிவனது திருவடிகளுக்கு மலர்களைத் தூவித் திருப்பள்ளியெழுச்சியைப் பலர் படிக்கின்றனர். தொழுது தமது வேண்டுகோளை அழுதழுது சொல்பவர்கள் பலர். தலையில் கையைக் கூப்பித் தொழுபவர் பலர். அடியார்கள் அதிகாலையில் பல்வேறு முறைகளில் சிவனைத் தொழுகின்றனர். அதனால் நீயும் தினமும் அதிகாலையில் வந்து தொழு. உனக்கு வேண்டிய உதவிகளை நல்லைநாதன் செய்வார். உனக்கு என்ன தேவையோ அதை என்னிடம் கேள்" என்றார் கதிரேசன்.

**பூதங்கள் தோறும்நின் றாய்எனின் அல்லால்**

**போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்**

**கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்**

**கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்**

**சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா**

**சிந்தனைக் கும்அரியாய் எங்கள் முன்வந்து**

**ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்**

**எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. 05**

காந்தரூபன் எதுவும் சொல்லாது நல்லைநாதனின் அருகில் சென்று அமர்ந்தான். நல்லைநாதன் அவனைத் தனக்கருகில் இருத்தி அவனது வலக்கையைப் பிடித்து அன்புடனும், ஆதரவுடனும் தடவினார். பின்பு திருப்பள்ளியெழுச்சியைப் பாடத் தொடங்கினார். முன்பு அவர் அவனுக்குச் சொன்னது அவனின் நினைவுக்கு வந்தது; "மகனே, மனிதப் பிறப்பு கிடைக்க முடியாத அருமையான பிறப்பு. அதனால் அதனை எமது முன்னேற்றத்துக்காகப் பயன்படுத்த வேண்டுமே தவிரத் தீயவற்றிற்காகப் பயன்படுத்தக்கூடாது. இந்த வயதில் கற்பது தான் இன்பம். இப்போ கற்காவிட்டால் பின்பு கற்க முடியாது. கற்றவர்களைப் பார் எவ்வளவு வசதியாகவும், மகிழ்வாகவும் வாழ்கின்றனர். அதற்குக் காரணம் அவர்கள் கற்ற கல்வியும் அதனால் உண்டான அறிவுமேயாகும். நாம் நல்லவற்றைச் செய்ய வேண்டும். நல்லவை செய்யும் மனதை கடவுள் வழிபாடுதான் உருவாக்கித்தரும். கடவுளை வழிபட்டால் அவர் தீயவற்றைச் செய்யவிடார். சிவன் உயிர்கள் அனைத்திலும் இருக்கிறான். அதனால் உயிர்கள் அனைத்தினதும் குறைகளையும் அறிந்து தீர்த்து வைக்கிறான். அனைத்துமாக அவன்

இருப்பதாலும், அதற்கு அப்பாலும் இருப்பதாலும் அவன் அனைத்தையும் அறிபவனாக உள்ளான். அதனால்தான் சிவனடியார்கள் இசையுடன் அவனது பெருமைகளைப் பாடி ஆடித் துதிக்கின்றனர். சிந்தனைக்கு அப்பாற்பட்ட அவனை வணங்கினால் அவன் எம்முன் வந்து நிற்பான். நான் ஒரு விவசாயி. வசதியில்லாதவன். இன்று எனது பிள்ளைகளால் உயர்வடைந்திருக்கிறேன். எனது பிள்ளைகள் சிவனை நம்பியதால் நல்ல தொழில்களில் இருக்கிறார்கள். அவர்களை மக்கள் மதிக்கின்றனர். நீ வசதியான குடும்பத்தில் பிறந்தவன். உனது தீயசெயல்களால் உன்னையும் வருத்தி உனது பெற்றோரையும் வருத்துகிறாய். இதை ஒரு கணம் சிந்தித்துப்பார். நீ எவ்வளவு வசதியாக வாழவேண்டியவன். இப்போதும் காலம் கடந்து விடவில்லை. உனது தீயபழக்கத்தை விட்டுவிட்டுச் சிவனை வணங்கு உனது குறைகள் யாவும் தீரும். சிவன் உனக்கு முன்வந்து உன்னைத் திருத்தி நல்லவனாக்குவான்" காந்தரூபனின் மனதில் ஒரு தெளிவு உண்டானது. அவன் திருப்பள்ளியெழுச்சியைப் பாடத் தொடங்கினான்.

**பப்பற விட்டிருந்து உணரும்நின் அடியுயர்**

**பந்தனை வந்தறுத் தார் அவர் பலரும்**

**மைப்பறு கண்ணியர் மானுடத் தியல்பின்**

**வணங்குகின்றார் அணங் கிண்மண வாளா**

**செப்புறு கமலங்கண் மலரும்தண் வயல்சூழ்**

**திருப்பெருந் துறை உறை சிவபெருமானே**

**இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டருள் புரியும்**

**எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. 06**

அன்று மாலை பல்கலைக்கழகத்தால் வந்த கவிதா கதிரேசனுக்குச் சொன்னாள்; "காலையில் எழுந்து சிவனது திருவடிகளுக்குப் பூப்போட்டு வணங்கித் திருப்பள்ளியெழுச்சியைப் பாடிய பின்பு என்றுமில்லாத ஒரு மகிழ்வு, நிம்மதி எனக்கேற்படுகிறது. இது வரை நான் மகிழ்ச்சியாக இருப்பதாகக் காட்டிக் கொண்டேனே தவிர மகிழ்ச்சியாக இருக்க முடியவில்லை. இப்போது ஒரு அமைதி, துணிவு, மகிழ்ச்சி என்பன உண்டாகியுள்ளன. மனம் ஒடுங்கிப் பற்றுக்கள் அற்று இருப்பவர்களுக்கு வழிபாடு தேவையில்லை என்பீர்கள். அது உண்மை. எனது மனம் அடங்க மறுக்கிறது. என்றோ நடந்த அந்தத் துயரச் சம்பவம் மனதை விட்டகலாது துன்பம் தருகிறது. ஆனால் சிவனைக் காலையில் வழிபட்டுத் திருப்பள்ளியெழுச்சியைப் பாடியபின்

இவ்வளவு காலமும் என்னை வாட்டிய துன்பங்கள் யாவும் நீங்கிவிட்டன. பற்றற்ற முனிவன்கூட தன் வாழ்நாள் முழுவதும் சிவவழிபாட்டில் ஈடுபட வேண்டும். சிவவழிபாடு பயன்கள் பெறுவதற்கல்ல. மனம் மகிழ, தீயசெயல்களைச் செய்யாதிருக்க வழிபாடு அவசியம் என்பீர்கள். அது உண்மை. கடவுளை நினையாத வேளைகளில் மனதில் தீய எண்ணங்கள் தான் உருவாகின்றன. அதற்குத் திருப்பள்ளியெழுச்சி எனக்கு உதவுகிறது. சிவனை அதிகாலையில் வணங்கி அவனைத் துயிலெழுப்பி அவனுடன் பேசும்போது மனம் அமைதி அடைகிறது. நேற்றையநிலையைவிட இன்றையநிலை மேலும் உற்சாகத்தை அளிக்கிறது. பரபரப்பு, பதைபதைப்பு, பழையதுயரம், கேடு, போட்டி, பொறாமை என்பன யாவும் அற்று மனம் வெறுமையடைகிறது. வாழும்வரையில் இந்த நிலையில் இருக்க வேண்டுமானால் இறைவனை இடைவிடாது தொழுதல் வேண்டும். பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது கூட முன்பு நடந்தவை நினைவுக்கு வரும். இப்போ வருவதில்லை" என்றாள் கவிதா. அவளது முகம் மலர்ந்திருந்தது.

**அது பழச்சுவையென அமுதென அறிதற்கு**

**அரிதென எளிதென அமரும் அறியார்**

**இது அவன் திருவுரு இவன் அவன் எனவே**

**எங்களை ஆண்டு கொண்டு இங் கெழுந்தருளும்**

**மதுவளர் பொழில்தரு உத்தர கோச**

**மங்கையுள்ளாய்திருப் பெருந்துறை மன்னா**

**எது எமைப் பணிகொளு மாறது கேட்போம்**

**எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. 07**

"கவிதா இப்போது உன்னில் மாற்றம் தெரிகிறது. நீ உனது துன்பங்களைச் சிவனிடத்து ஒப்படைத்துவிட்டாய் என்று தான் நான் இவ்வளவு நாட்களும் நம்பினேன். ஆனால் நீ சிவனை வணங்கியபோதும் அந் நினைவில் தான் இருந்துள்ளாய் என்பதை இப்போதுதான் உணர்கிறேன். தற்போதைய மாற்றம் உனது எதிர்காலத்தை வழிப்படுத்தும். சிவ இன்பம் என்பதை வர்ணிக்க முடியாது. ஆனால் மாணிக்கவாசகர் அதைக் கனிவகைகளின் சுவையோடு தேனாமிர்தத்தையும் கலந்து உண்பது போன்ற சுவையை உடையது சிவானந்தம் என்கிறார். அவர் சொன்னால் அது உண்மையாகத்தான் இருக்கும். இன்று உனது முகத்தில் உண்டான பூரிப்புச் சிவஅனுபவத்தால் ஏற்பட்டுள்ளது. அதனால் உனது மனம் இனிக்கிறது; மகிழ்கிறது.

அதைத்தான் நான் விரும்புகிறேன். தேவர்களால்கூட அறிய முடியாத சிவனை வேறு எதனாலும் அறிய முடியாதென்று சிவனைப் பற்றித் தெரியாதவர்கள் கூறுகின்றனர். உன்னைப்போலச் சிவ நினைவாக இருப்பவர்களின் மனதில் சிவன் ஆனந்தமாக இருந்து அவர்களை மகிழ்ச்சிபடுத்திக் கொண்டிருப்பான். ஒருவன் எப்போதெல்லாம் மிக்க மகிழ்ச்சியடைகிறானோ அப்போதெல்லாம் அவன் சிவனைக் காண்பான். சிவனைக் காணத் தவம் செய்யத் தேவையில்லை. ஒரு பூவை அன்புடன் அவனது திருவடியில் சேர்த்துத் திருமுறையைப் பாடினால் சிவன் பாடுபவர்களிடம் அகப்பட்டுவிடுவான். அவனை அன்பு என்ற சிறையில் அடைத்தால் அவனால் வெளியேற முடியாது. அவன் ஆயுள்க் கைதியாகிவிடுவான். அவன் பல்லாயிரம் வடிவங்களாகவும், அவ்வடிவங்களுக்கு அப்பாற்பட்ட வடிவங்களாகவும் இருக்கிறான் என்று ஆன்றோரால் சொல்லப்பட்ட சிவனே நாம் எப்படி உமக்குப் பணிவிடை செய்ய வேண்டும் என்பதை நீ காட்டியருள்வாய். அதனால்தான் இவ்வளவு காலமும் மெய்யன்போடு உன்னை வணங்கிய கவிதாவுக்கு மன அமைதியைக் கொடுக்காதிருந்தாய். இப்போது திருப்பள்ளியெழுச்சியைப் பாடியபின் அவளை மகிழ்ச்சிப்படுத்தியுள்ளாய். அதற்கு நன்றி" என்றார் கதிரேசன்.

**முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்**

**மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்**

**பந்தணை விரலியும் நீயும்நின்னடியார்**

**பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே**

**செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்**

**திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி**

**அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்**

**ஆரமுதே பள்ளி யெழுந்தருளாயே. 08**

அன்று பிரதோச நாள். அதிகாலை நான்கு மணிக்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆச்சிரமத்தில் உள்ள சிவன் கோவிலுக்கு வந்துவிட்டார். நல்லைநாதனும் மகாலிங்கமும் வேறு பல அடியார்களும் வந்து கோவிலை அலங்கரித்தனர். காந்தரூபன் ஆச்சிரமத்திற்கு வரத் தொடங்கி மூன்று மாதங்கள் கழிந்து விட்டன. அவன் உற்சாகமாக இருந்தான். தீய செயல்களையெல்லாம் விட்டு விட்டுத் திருந்தி ஆச்சிரம வேலைகளில் ஈடுபட்டு வந்தான். கதிரேசன், நல்லைநாதன், மகாலிங்கம், கவிதா, மாதுமை, அங்கயன் போன்றோர் அவனது நண்பர்களாகியமையால் அவன் உற்சாகமாக இருந்தான்.

அன்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் உரையாற்றினார்; “சிவனடியார்களே, இன்று பிரதோசம். அடியார்கள் பலர் மாலைகளைச் சிவனுக்கு சூட்டி மலர்களை அவனது திருவடியில் பரப்பி வழிபடுகின்றனர். ஆதி மூலமான சிவனிடமிருந்தே யாவும் தோன்றி நிலைபெற்றுப் பின் ஒடுங்குகின்றன. சிவனது அருள்ப் பெரும் தோற்றத்தை பிரமா, விட்டுணு, உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகள் கூட அறியமாட்டார்கள். அப்போ யார் அறிவார்கள்” என்று நிறுத்தினார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்” சுவாமி, அவர்களுள் யார் பெரியவர் என்ற நிலை உள்ளதால் தான் அவர்களால் அறிய முடியவில்லை. மெய்யன்போடு அம்பிகையுடன் கூடி எல்லா உள்ளத்திலும் எழுந்தருளியுள்ள எமது தந்தையான சிவனை மெய்யடியார்கள் அறிவர். மாணிக்கவாசகரை அதனால்தான் அந்தண வடிவமேற்றுவந்து ஆட்கொண்டவன். அவன் அழிவில்லாத அரியபொருள்” என்றான் காந்தரூபன்.

“நல்லது மகனே, சிவனடியார்களே, காந்தரூபனைப்போல சிவபக்தனாக மாறுங்கள்” என்று கூறித் தனது உரையை முடித்தார் சுவாமியார்.

அப்போது அவனின் அருகில் வந்த கவிதா கேட்டாள்; “தம்பீ, இவ்வாறு நல்லவனாக இருக்கும் நீ எப்படித் தீயபழக்கத்திற்குட்பட்டாய்”

அவன் விம்மி விம்மி அழுதான். பின் சொன்னான். “எனது நண்பன் திலீபன். அவனது அண்ணன் மணிவண்ணன். மணிவண்ணன்” என்றதும் ஒரு கணம் நிலைகுலைந்து போனாள் கவிதா. காந்தரூபன் தொடர்ந்து சொன்னான். “மணிவண்ணன் மிகவும் தீயவன். போதைப் பொருள்களை விற்பவன். களவெடுப்பவன். பெண்களைக் கெடுப்பவன். அவன்தான் போதைப் பொருளை எனக்கும் எனது நண்பர்களுக்கும் கொடுப்பவன். இப்போ போதைப் பொருட்கள் இனிப்புக்களாக விற்கப்படுகின்றன. அதனால் தான் நான் கெட்டழிந்தேன். நான் திருந்தியபின்பு காலையில் திருப்பள்ளியெழுச்சி பாடியபின், “சிவனே, மணிவண்ணனும் ஒரு வகையில் அசுரன்தான். கொடிய அசுரர்களை அழிக்கும் நீ அவனையும் அழித்து விடு. அவனால் ஏராளமான இளைஞர்களும், யுவதிகளும் கெட்டழிக்கின்றனர்” என்று மனமுருகி வேண்டினேன். எனது முறைப்பாட்டைச் சிவன் ஏற்று அவனைக் கொன்று விட்டார். அவன் ஒரு நாள் போதை தலைக்கேறிய நிலையில் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த போது ஒரு கனரக வாகனம் மோதியதால் அவன் இறந்து விட்டான். உண்மையில் சிவன் அருளுள்ள தெய்வம்” என்றான் உணர்ச்சி பொங்க.

கவிதாவின் உள்ளம் ஒரு கணம் உறைந்து செயல்பட மறுத்தது. அந்த மணிவண்ணன் தான் அவளைக் கெடுத்தது. “அவன் பல பெண்களைக் கெடுத்ததோடு அவர்களை வெருட்டிப் பணமும் பெறுகின்றான், “அக்கா இப்படியானவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள்” என்றான் காந்தரூபன்.

**விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா**

**விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்**

**மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே**

**வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்**

**கண்ணகத் தேநின்று களிதரு தேனே**

**கடலமு தேகரும் பேவிரும் படியார்**

**எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்**

**எம்பெரு மான்பள்ளி யெழுந்தருளாயே. 09**

“அக்கா, வேண்டா வெறுப்பாக எனது தந்தையின் வற்புறுத்தலுக்காகத் தான் வந்து விருப்பமின்றித் திருப்பள்ளியெழுச்சியைப் பாடினேன். அப்படியிருந்தும் சிவன் என்னை மாணிக்கவாசக சுவாமிகள் சொன்னதுபோல விரும்பியதால்தான் எனது எண்ணத்தை நிறைவேற்றினார். அதனால் நான் தினமும் திருப்பள்ளியெழுச்சியைப் பாடி வருகிறேன். இப்போ எனது விருப்பங்கள் பலவும் நிறைவேறுகின்றன. சுவாமியார் சொன்னதுபோலத் தேவர்களுக்கும் எட்டாத பரம்பொருளான சிவன் பூமிக்கு இறங்கிவந்து சிவனடியார்களுக்குப் பெரும் பெரும் நன்மைகளைச் செய்கிறான். எப்போதும் வணங்குபவர்களின் உள்ளத்தில் பேரின்பத்துடன் இருந்து அவர்களை வழிநடத்துகின்றான். அவன் உலகெங்கும் நீக்கமற வியாபதித்திருக்கும் மெய்ப்பொருள்” என்பார். அது உண்மை. நல்லைநாதன் மாமா எனது தூரத்து உறவினர். சிவபக்தர். அவரால்தான் நான் இன்று இவ்வாறு மாறினேன். இப்போ என்னை வெறுத்த எனது தந்தை என்னை நேசிக்கிறார். அது எனக்குப் போதும்” என்று காந்தரூபன் பேசிக் கொண்டிருந்தான். அவை எதுவும் அவளுக்குப் புரியவில்லை. அவளின் நினைவு மணிவண்ணன் மீதே இருந்தது. அவன் சாவித்திரி என்ற அவளது நண்பிக்கு ஓயாது தொல்லை கொடுத்துக் கொண்டேயிருந்தான். அதை அறிந்த பின்பு கவிதா கதிகலங்கிப் போனாள். அவளால் சிவனை நிம்மதியாக வணங்க முடியவில்லை. இப்போ அவன் அழிக்கப்பட்டமையால் சிவனுக்கு நன்றி சொன்னாள். அவளது மனம் என்றும் இல்லாதவாறு மகிழ்ந்தது.

**புவனியில் போய்ப்பிற வாமையின் நாள்நாம்**

**போக்குகின் றோம்அவ மேஇந்தப்பூமி**

**சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்**

**திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்**

**அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்**

**படவும்நின் அவர்தம்மெய்க்கருணையும் நீயும்**

**அவனியில் புகுந்தெம்மை ஆட்கொள்ள வல்லாய்**

**ஆரமு தேபள்ளி யெழுந்தருளாயே.** **10**

“காந்தன், துன்பப்படுபவர்களுக்குத்தான் மகிழ்வின் அருமை தெரியும். நான் பெருந் துன்பப்பட்டேன். கதிரேசன் ஐயாவின் துணையால் இப்போது முழுமையான மகிழ்வைப் பெற்றுள்ளேன். இனி எனக்குத் துன்பம் வரச் சிவன் விடமாட்டான். அதனால் இனித் தொடர்ந்து காலையில் வந்து திருப்பள்ளியெழுச்சியைப் பாடப் போகிறேன். நீயும் வா. “சுகபோகத்தை விரும்பிச் சுவர்க்க இன்பத்தை நாடிய தேவர்களுக்கு அந்த இன்பம் சலிப்பையும், வெறுப்பையும் கொடுத்தது. அதனால் அவர்கள் சிவஞானத்தைப் பெற விரும்பி அவர்கள் மண்ணுலகத்தில் பிறக்க விரும்புகிறார்களாம். சிவன் அடியார்களை ஆட்கொள்வதற்காக மண்ணுலகத்திற்கு எழுந்தருளி வருவானாம். அப்படி வந்து தான் மாணிக்கவாசகரை ஆட்கொண்டவன் என்று கதிரேசன் ஐயா கூறுவார். அத்துடன் மண்ணுலகம் தான் இன்பங்களையும், துன்பங்களையும் அனுபவிக்கும் இடம். இதை உணர்ந்தவர்கள் இங்கு நீதியாகவும், ஒழுக்கமாகவும் வாழ்ந்து சிவனை அடைய முயல வேண்டும். உணவுக்கென்று பசியால் துடிப்பவன் சுவையான உணவை எதிர்பார்க்கலாகாது. கிடைத்ததை உண்டு உயிர்வாழ வேண்டும். உயிர் வாழ்ந்தால் தான் நல்ல செயல்களைச் செய்யலாம். இது பலருக்குத் தெரிவதில்லை” என்றும் கூறிக் கவலைப்படுவார். நான் பட்ட துன்பம் சிலநாட்கள் சிவனைத் துயிலெழுப்பிப் பாடியதோடு தீர்ந்து விட்டது. இனி நான் நிம்மதியாகவும், மகிழ்வாகவும் வாழ்வேன்.” என்று சிரித்தாள் கவிதா. காந்தரூபனுக்கு அவளின் பேச்சு விளங்கவில்லை.

திருச்சிற்றம்பலம்